உண்மை - நடுநிலை - உறுதி
ஊடக வளங்கள் பயிற்சி மையம்
யாழ். பல்கலைக் கழகம்

# எழுத்தாணி

EZHUTHTHANY

யாழ் பல்கலைக் கழக ஊடக வளங்கள் நிலைய இதழியல் 2 ஆம் அணி மாணவர்களின் பயிற்சி இதழ்

எழுத்து- 01 ஆணி - 01 | சித்திரை 2008 | பக்கம் 08

வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இன்ரநெற்றில் முகம் பார்த்து கதைப்பதற்கு ......
Internet Browsing
Here to your face
Internet Call 7/=
இந்தியாவிற்கான அழைப்பு 15/=
திருமுருகன் கொம் நெற்

## உள்ளே

நலிந்த மாணவர்களுக்கு உணவு உதவி பக்கம் : 03
சினிமாவால் சீரழியும் கலாசாரம் பக்கம் : 04
வயோதிபர்களுக்கு உதவும் சாந்திநிலையம் பக்கம் : 05
ஒளி இழந்தோருக்கு ஒளிகொடுக்கும் வாழ்வகம் பக்கம் : 06
உலக அரங்கு பக்கம் : 07

# ஊடக அறிவை தாமதமின்றி பரவலாக்குவது அவசியம்!

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர்



**உலக நாடுகளில் பாடசாலை மட்டக் கல்வித்திட்டத்திலே ஊடக அறிவு கிட்டத்தட்ட 40 இற்கும் அதிமான நாடுகளில் இடம்பிடித்துள்ளது. எங்களது நாட்டிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் இனியும் தாமதமின்றி இந்த அறிவைப் பரவலாக்குவது இன்றியமையாதது என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்,சண்முகலிங்கன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இந்த ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவளங்கள் பயிற்சிமைய முழுநேர ஊடக டிப்ளோமா மாணவர்களின் தொடக்க வைபவத்தில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியபோது துணைவேந்தர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.**

தகவல் தொழில்நுட்பமும் தொடர்பியலும் இன்றியமையாத சமூக அறிவியல்களாய் இன்று பரிமாணம் பெற்றுள்ளன. மேலை நாடுகள் பலவற்றிலும் பல மாணவர்களை ஈர்க்கின்ற கல்விப் புலமாக ஊடகக் கல்வி இடம்பிடித்துள்ளது.

எங்கள் புலங்களில் இப்பொழுது தான் இந்தத் துறைசார்ந்த ஆர்வமும் கல்வியும் முளைவிட்டுள்ளது. எங்கள் ஊடகக்கல்வி நிலையம் (எம்.ஆா.ரி.சி) வரவும் இன்று அங்குரார்பணமாகும் கல்விநெறிகளின் முக்கியத்துவமும் மேற்குறித்த பின்னணியில் தான் செயல்வடிவம் பெறுகின்றது.

- ஊடகவியல் சார்ந்த அத்தனை வல்லமைகளையும் எங்கள் வசமாக்குதல்.
- ஊடக அறிவுகொண்ட சமூகமாக எங்கள் மக்களுக்கான அறிவு வெளிச்சத்தை ஏற்படுத்தல்.

என இரு பிரதான இலக்குகளுடன் இந்தக் கற்கைநெறிகளும் பயிற்சிகளும் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகின்றது. நீதியான, அநீதியான, அழகான நாளை என்பது எங்களது மேம்பாட்டு இரசனையின் வழியானது. இந்த நல்ல இரசனையை வளர்க்கும், படைக்கும் ஊடகக்கல்வியை மேன்மேலும் மேம்படுத்தி பல்கலைக் கழகத்திற்குட்பட்ட நிலைவரை வளர்த்தெடுப் பதற்கென செயற்றிட்டங்கள் வகுக்கப் படுகின்றன. உலக நாடுகளில பாட சாலை மட்ட கல்வித் திட்டத்திலேயே ஊடக அறிவு கிட்டத்தட்ட 40 இற்கும் அதிகமான நாடுகளில் இடம் பிடித்துள்ளது. எங்களது நாட்டிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் இனியும் தாமதமின்றி இந்த அறிவினை பரவலாக்குவது இன்றியமையாதது.

உங்கள் கல்வியை சிறப்பாக, முழுமையாக நிறைவுசெய்திட இந்த அறிவியல் பணியில் இணைந்திட உங்களுக்கும் இந்தக் கல்வியில் உறுதுணையாகும் ஆசிரியர்கள். ஏனைய ஊடகவளத் துறையினர் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன், என துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தனது உரையில் தெரிவித்தார்.

## கருணாரட்ணம் அடிகளார் கிளைமோர் தாக்குதலில் பலி



வடக்குகிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் - கிளி அடிகளார் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்நார்

கருணாரட்ணம் அடிகளார் பயணம் செய்த வாகனம் மல்லாவி - மாங்குளம் வீதியில் குழந்தை யேசு ஆலயத்திற்கு சமீபமாக இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மாங்குளத்தில் வழிபாட்டினை முடித்துவிட்டு மல்லாவி வன்னி விளாங்குளத்தில் உள்ள தனது பங்கு கோவிலுக்கு வெள்ளை ஊர்தியில் திரும்பிக் கொண்டிருந்தபோது இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் கருணாரட்ணம் அடிகளார் உயிரிழந்துள்ளார். இத்தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பு இல்லையென விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பத்திற்கு யாழ். மறை மாவட்டம் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளது. இவர் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை அவலங்களை வெளிநாடுகளுக்கு கொண்டுசெலவதில் பெரும் பங்காற்றினார்.

## 500 சிறுவர்களை இணைத்து சங்கம நிகழ்வு

(நவயுகன்)

குடும்ப புனர்வாழ்வு நிலையம் சாந்திகம் மற்றும் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிலையமும் இணைந்து சிறுவர் சங்கமம் நிகழ்வொன்றை மே மாதம் 03ஆம் திகதி நல்லூர். சி.சி.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 22 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு குடும்ப புனர்வாழ்வு நிலையத்தில் குடும்ப புனர்வாழ்வு நிலைய யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன் தலைமையில் சாந்திகம் உளவள நிலைய திட்ட இணைப்பாளர் சி.விஜயரெத்தினம் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.வி சங்கரப்பிள்ளை இலங்கை சிறுவர் பாதுகாப்பு யாழ்.மாவட்ட இணைப்பாளர் சு.சுசிகரன் ஆகியோர் கலந்துகொண்டு தீர்மானங்களை மேற்கொண்டனர்.

இதில், இடம் பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் பின்தங்கிய கிராமங்கள் என இனம் காணப்பட்ட கோப்பாய் சங்கானை சாவகச்சேரி பிரதேசங்களைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் மே மாதம் 03 ஆம் திகதிய நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த சிறார்களின் பல்வேறு கலைகலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் ஊடகவியலாளர்களினால், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறார்களின் எதிர்காலக் கல்வி சம்பந்தமாக கேள்வி எழுப்பப்பட்டது.

## அடையாள அட்டை வழங்கப்படுமா? பொதுமக்கள் ஆதங்கம்

(நவயுகன்)

யாழ்.குடாநாட்டில் அவசர அவசரமாக தேசிய அடையாள அட்டை வழங்கும் அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன இருந்த போதிலும் யாழ்.மாவட்ட மக்கள் அடையாள அட்டைக்கு விணணப்பித்து பலவருடங்களாகியும் தேசிய அடையாள அட்டைகளை பெற முடியாது திண்டாடிவரும் நிலமை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக பல பிரதேச செயலகங்களில் தேசிய அடையாள அட்டைக் கான அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தென் பகுதியைப் பொறுதத வரையில் இந்த அலுவலகங்கள் மூலம் மக்களின் தேசிய அடை யாள அட்டைகளை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்க் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் திறக்கபபட்டு வரும் தேசிய அடையாள அட்டை அலுவலகங்களில் இதுவரையும் அடையாள அட்டை வழங்குதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.




நீண்ட காலத்தின் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழ ஊடக வள நிலையத்துக்கு விஜயம் செய்த போஜோ நிறுவனத்தின் ஆலோசகர் கென்றிக் குருநாதப்பிள்ளை வெளியாகும் பத்திரிகைகளை பார்வையிடும்போது... (படம்: சுரேஸ்)

## எம்.ஆர்.ரி.சியின் புதிய பணிப்பாளர் பதவியேற்பு



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள பயிற்சி மையத்தின் புதிய பணிப்பாளராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை மே மாதம் 2 ஆம் திகதி பதவியேற்றுள்ளார்.

புதிய பணிப்பாளரின் பதவியேற்பு நிகழ் வில் பேராசிரியர் வி.பி.சிவநாதன். ஊடகவளங்கள் பயிற்சி மைய இணைப்பாளர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை. முன்னாள் ஆயர் ஜெபநேசன் பல்கலைக்கழக இணைப்பாளர் விமல் சுவாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாணி EZHUTHTHANY

## துணைவேந்தருக்கு ஒரு அன்புமடல்

யாழ் பல்கலைக்கழக இதழியல் டிப ளோமா பகுதிநேர இரண்டாம் அணி மாணவர்களாகிய நாம் எழுத்தாணி என்ற பயிற்சிஇதழின் முதல் பிரதியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின றோம்.உழைக்கும் ஊடகவியலாளர் களை உள்ளடக்கிய மாணவர்கள் இரண்டாவது அணியாக கற்றலை முடித்து வெளியேறி நவீன ஊடக முறையினை கையாளக்கூடிய ஓர் சிறந்த அணியாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

யாழ் குடாநாட்டு ஊடகவியலாளர் களுக்கு வழிகாட்டும், ஊடகவியலா ளர்களை உருவாக்கும் ஒரு நிறுவன மாக யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம் உள்ளமை வரவேற்கத்தக்கது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் னர் அமைக்கப்பட்ட ஊடக வளங்கள் பயிற்சி மையம் ஊடகவியலாளர்களை யும் ஊடக மாணவர்களையும் சிறந்த வகையில் உருவாக்கி வருகிறது.

பகுதிநேர இரண்டாம்அணி மாண வர்களாகிய நாம், யாழ் குடாநாட்டி லிருந்து வெளிவரும் சகல ஊடகங் களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட உழைக்கும் பத்திரிக்கை யாளர்கள், எம்மவர்களில 90 வீதத்திற் கும் மேற்பட்டவர்கள் இன்னும் 25 வருடங் களுக்கு மேல் ஊடகப் பணியை மேற் கொள்ளக்கூடியவர்கள்.

எமது ஊடக உருவாக்கம் யாழ் மாவட்டத்தில், ஏன் தமிழ் ஊடக உல கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இந்நிலையில் வளமான பயிற் சியை வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த ஊடக மையத்திற்கு உண்டு. யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங் கன் அவர்கள் ஒரு ஊடகவியலாளர். அவர் ஊடகவியலாளர்கள் மீது கொண் டுள்ள அக்கறை, எதிர்பாாப்பு என்பன எமக்குத் தெரியும்.

அந்தவகையில் நாம் முன்வைக் கும் வேண்டுகோள்களை அவர் ஏற் றுக்கொண்டு உதவுவாரானால் சிறந்த ஊடகவியலாளர்களாக எம்மை வளப் படுத்திக் கொள்ளமுடியும்.

இவ் அணியில் உள்ள மாணவர்க ளாகிய நாம் வரையறுக்கப்பட்ட பிர தேசத்திற்குள் இருந்துகொண்டு எந்த வித பயிற்சிகளும் இன்றி அனுபவ ரீதியான ஊடகவியலாளர்களாக உரு வாகியுள்ளோம். எனவே, எமக்கு கொழும்பு மற்றும் வெளிநாடுகளி லிருந்து விரிவுரையாளர்கள் அழைக் கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுவது எமது வாண்மை விருத்திக்கு பெருந் துணையாக அமையும்.

⇨ கற்றலுக்கு தேவையான ஊடகத் துறைசார் புத்தகங்களை பெற்று ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் நூல கத்திற்கு வழங்குவதனூடாக எமது கற்றல் செயற்பாடு மேலும் விரிவாக் கம் பெறும்.

⇨ எமது உள்ளக பயிற்சி செயற்பாட் டிற்கென கொழும்பு மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள ஊடக நிறுவனங்களிற்கு அனுப்பவேண்டும்.

மேற்படி எமது தாழ்மையான கோரிக்கை களை துணைவேந்தர் அவர்கள் நிறைவேற்றுவார் என நாம் நம்பு கின்றோம்.

நாம் கற்கையை நிறைவு செய்து வெளியேறும்போது யாழ் சமுதாயம் சிறந்தவொரு ஊடகவியலாளர்களை பெற்றுக்கொள்ளும் என்பது உறுதி.

# வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் சமூக நலத் தொண்டுப் பணிகள்

வட பிரதேச நல் லொழுக்க சம்மேள னத்தின் செயற்பா டுகள் தொடர்பாக அதன செயலாளர் செ.குமாரசிங்கம் எழுத்தாணி சஞ்சி கைக்கு அளித்த



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் [illegible] தொகுப்பு

1972 ஆம் ஆண்டு சங்கானை மற் றும் காரைநகர்பிரதேசங்களில். இயங்கி வந்த நல்லொழுக்க சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட ஒரு அமைப்புத் தான் நல்லொ ழுக்க சம்மேளனம். இதற்கென அப்போது காரை நகரில் தலைமைக் காரியாலயம் ஒன்று திறக் கப்பட்டு செயற்பட்டு வந்தது. இதன் முதற் தலைவராக ஆசிரியர் திருவாளர் அ.அரிய ரத்தினம் செயற்பட்டு வந்தார். இவ் வமைப்பு மெ்ல்ல மெல்ல தனது செயற்பாடு களை யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் விரிபுவு படுத்தி



சங்கானை பேரூந்து நிலையத்தில் போதைப் பொருள் எதிர்ப்பு விளம்பரப் பலகையை வலி.மேற் குப் பிரதேச செயலர் திருமதி ரி.பாபு திரைநீக்கம் செய்து வைத்தபோது

இன்று வடமாகாணம் முழுவதும் விஸ் தரித்து செயலாற்றி வருகிறது. இது 1987 களின் பின்னர் போரூட் நிறுவனத்துடன் இணைந்து அளப்பரிய சமூகப்பணிகளை மேற்கொண்டு வந்தது. எனினும் 1995 களின் பின் தனித்து சுயமாகவே நின்று சமூகப்பணிகளை முன் னெடுத்து வருகின்றது. இதன் தலைமையகம் காரைநகரிலிருந்து மாற்றப்பட்ட பின் வலி. மேற்கில் சுழிபுரம்,சித்தன்கேணி உள்ளிட்ட பல இடங்களிலும் இயங்கி தற்போது சங் கானை பட்டினசபை வீதியில் இயங்கி வருகின்றது.

***வடபிரதேச நல்லொழுக்க சம்மேளத்தின் நோக்கம் மற்றும் அதன் பணிகள் பற்றிக் கூறமுடியுமா?***

எமது சம்மேளனம் மது விலக்கம் சமா தானம்-சகோதரத்துவம்-நல்லொழுக்கம் எனும் தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்டு மக்கள் மத்தியில் சண்டை-சச்சரவுகளை நீக்கி மது அடிமையிலிருந்து நீங்கிய சமாதானம் மிக்க தொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு அயராது பாடுபட்டு வருகிறது. இதற்காக சகல மட்டங்களிலும் மது ஒழிப்பு, புகைப்பொருள் விலக்கல் போன்ற பிரசாரங்களை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. பாடசாலைகள், சன சமூக நிலையங்கள், வைத்தியசாலைகள் எனப் பல இடங்களுக்கும் சென்று பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதுடன் கிராமிய மட்டங்களிலிருந்து இளைஞர், யுவதிகளை தலைமை அலுவலகத்துக்கு அழைத்து அவர்க ளுக்கு பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தமர்வு களையும் நடத்தி வருகின்றோம்.

மேலும் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் (மே-31) போதைப்பொருள் எதிர்ப்பு தினம் (யூன் - 26) நல்லொழுக்க தினம் (அக் டோபர் - 03) ஆகிய தினங்களை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே கவிதை, கட் டுரை, ஓவியம் போன்ற போட்டிகளை நடத்தி அவர்களுக்குப் பரிசில்களையும் சான்றித்ழ்க ளையும் வழங்கி விழிப்புணர்வுகளை ஏற் படுத்தி வருகின்றோம்.

இதே வேளை வருடம் ஒரு பாடசாலையை தெரிவு செய்து அங்கு நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் மாணவர்களைக் கௌரவிப்ப தோடு பரிசில்களையும் வழங்கி வருகிறோம்.

அத்தோடு வைத்தியசாலை, பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் அப்பகுதிப் பொது மக்களையும் அயற்பிரதேச மக்களையும் திரட்டி சிரமதானப் பணிகளை முன் னெடுப்பதன் ஊடாக அவர்கள் மத்தியில் சமா தானம் சகோதரத்துவம் ஐக்கியம் போன்ற உயரிய பண்புகளைக் கட்டியெழுப்பி வருகின் றோம்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கல்வி கற்கும் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்குவதுடன் அவர்களுக்கு அறநெறி வகுப்புகளையும் நடத்தி வருகின்றோம்.

வறிய மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்க வழக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கிராமிய மட்டங்களின் சிறு சிறு குழுக்களை அமைத்து அக்குழுக்களுக்கூடாக சேமிப்பு நடவடிக்கை களை முன்னெடுத்துவருகிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வாழ் வாதார மேம்பாடு கருதிபால்மா மற்றும் பணம் ஆகியவற்றை வழங்கிவருகின றோம். இவ்வாறு சம்மேளனத்தின் சமூக நலத்துறைப் பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

***வடபிரதேச நல்லொழுக்க சம்மேளத் தின் மேற்குறித்த பணிகளுக்கு நிதி மற் றும் பொருட்கள் கிடைக்கும் வழிமுறை கள் பற்றிக் கூறுவீர்களா?***

நிதி பற்றி குறிப்பிடுகின்றபொழுது-சம் மேளனத்தைப் பொறுத்தவரை பெரிய நிதி வளம் படைத்த ஒரு அமைப்பு என்று யாரும் கூறிவிட முடியாது. ஆயினும் குறைந்த நிதி வளத்துடன் நிற்பினும் சமூகத்தில் நிறைந்த சேவையை வழங்கவேண்டுமென்பது தான் சம்மேளனத்தின் இலக்கும் இலட்சியமும் ஆகும்.

தற்போது கொழும்பிலுள்ள அடிக் (ADIC) என்ற நிறுவனம் எமது சம்மேளனச் செயற் பாடுகளுக்கென ஒரு தொகை நிதியை ஒதுக்கித் தருகிறது. உண்மையில் அந்நிதியை மட்டும் பயன்படுத்தி சம்மேளனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. கூடவே அவ்வப்போது சமூகப் பெரியார்கள், வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்து கிடைக்கும் அன்பளிப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலதரப் பட்டவர்களிடமிருந்து கிடைக்கும் நிதி மூலம் சமூக அபிவிருத்திப் பணிகள் தொடர்கின்றன. இவை அவ்வப்போது கிடைத்து அவ்வப் போதே அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதால் சம்மேளனத்திற்கென்று நிரந்தர நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது. அப்பொழுது தான் எதிர்காலத்தில் எமது சமூக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

***எதிர்காலத்தில் நீங்கள் முன்னெடுக்க விருக்கும் திட்டங்கள் என்ன என்பது குறித் துக் கூறமுடியுமா?***



சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றி யீட்டிய மாணவிக்கு இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் ஆர். சிவசங்கர் பரிசில் வழங்கியபோது

வடமாகாணம் முழுவதும் சேமிப்புத்திட்டங் களை விரிவு படுத்தி சேமிக்கப்பழகும் சமு தாயம் ஒன்றை முழு வீச்சில் கட்டியெழுப்புதல். பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு தொழிற் பயிற்சி எதுவுமின்றி வீடுகளிலிருக்கும் இளை ஞர், யுவதிகளுக்கு தையல், கணனி போன்ற பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்தி அவர்க ளின் முன்னேற்றத்திற்கு உதவுதல்

சேமிப்பில் ஈடுபடும் மக்களுக்கு சுழற்சி முறையில் கடன் திட்டங்களை வழங்கி சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல். உதாரணமாக பெறும் கடன்நிதியை பிர யோசனமானமுறையில் செலவு செய்யுமாறு ஆடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு, வீட்டுத்தோட்டம் போன்ற பயன்மிக்க முயற்சிகளை முன்னெ டுக்க வகைசெய்தல்.

**சர்வா**

வறுமைக் கோட்டின் கீழுள்ள - பின்தங் கிய கிராமங்களில் கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு அவற்றின் மூலம் இனங் காணப்படும் பாடசாலை செல்லாத - பாடசா லையை விட்டு விலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து கல்வி கற்க வழி செய்தல்.

வறுமைக்கோட்டின் கீழ் இருந்து கல்வியில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டங்களை அறிமுகம் செய்தல்.

ஒரு மனிதனின் கல்விக்கு அடிப்படையாக அத்திபாரமாக முன்பள்ளிகள் அமைகின்றன. இத்தகைய முன்பள்ளிகள் இல்லாத கிராமங் களை இனங்கண்டு அங்கு முன்பள்ளிகளை நிறுவி பாலர் கல்வித் திட்டங்களை முன்னெடுப் பது போன்ற பல திட்டங்களை வகுத்து வைத் திருக்கின்றோம். எனினும் இவை எல்லாவற் றுக்கும் அடிப்படையாக - முதுகெலும்பாக நிதி மூலம் அவசியமாகின்றது. எனவே, சம்மேள னத்தால் முன்னெடுக்கப்படவிருக்கும் சிறந்த. சீரிய சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு தன வந்தர்கள் - தாராள மனம் படைத்தவர்கள் - கருணை உள்ளங்கொண்டவர்களிடமிருந்து நிதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்றார்.

## அல்லைப்பிட்டி மக்கள் மீண்டும் மீள்குடியமர்வு


அல்லைபபிட்டியிலிருந்து 2006 ஆம் ஆண்டு இடபெயர்ந்தவர்களில் 63 குடும பங்கள் ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி தமது சொந்த இடங்க ளில் இருவருடங்களில் இரண்டாவது தடவையாக குடியமர்த்தப்பட்ட னர்.

2006 ஆம் ஆண்டு அப்பகுதியில் நடத் தப்பட்ட தாக்குதலையடுத்து அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து 120 குடும்பங்கள் யாழ்.நா வாந்துறை. சென.நீக்லஸ் தேவாலயம், ஓ.எல். ஆர் தேவாலயம் ஆகிய இடங்களில் தஞ்ச மடைந்திருந்தனர் இவர்களில் 60 குடும் பத்தினரே அல்லைப் பிட்டியில் மீளக்குடியேறி னர்.

குடியேறிய நாளிலிருந்து மூன்று நாட் களுக்கு சமைத்த உணவும், மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணமும் வழங்கப்பட் டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலக உணவுத் திட்ட உதவி நலிந்த மாணவர்களுக்கு உரியமுறையில் கிடைக்குமா?



ஆசியப் பிராந்திய நாடுகளில் கல்விநிலையில் முன்னணி வகிக்கின்ற நாடுகளில் இலங்கையும் உள்ளது. இலங்கையின் தேசிய வருமானத்தில் கல்வித் துறைக்கே அரசாங்கம் பெருமளவு தொகையினை செலவிட்டுவருகின்றது. எனினும், கடந்த இரு தசாப்த காலமாக முடிவற்ற உள்நாட்டு யுத்தத்துக்காக நாட்டின் வளத்தினை முழுமையாக திசைதிருப்பியது. இவ்வாறான சூழ்நிலையிலேயே முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மிகவும் நலிவுற்ற மக்களுக்கு உணவு சார் உதவிகளை வழங்குவதற்காக உலக உணவுத் திட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்திட்டமானது

01). கல்விக்கான உணவு

02). வேலைக்கான உணவு

03). கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கான போசாக்குத் திட்டம்

என மூன்று பிரிவுகளாக முன்னெக்கப்படுகின்றன.

இதில் கல்விக்கான உணவுத் திட்டமானது வகுப்பு ஒன்று முதல் 9 வரையான மாணவர்களுக்கு உணவை வழங்குவதன் மூலம் குறுங்காலப் பசியை நீக்கி மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை மகிழ்ச்சிகரமான சூழலில் அதிகரிக்கச் செய்வதை இலக்காகக் கொண்டு நடை முறைப்படுத்தப்படுகிறது.

குறுங்காலப் பசியை ஒழித்து மாணவர்களின் கற்கும் திறனை அதிகரித்தல், மாணவர்களின் வரவினை அதிகரித்தல், பெற்றோரின் திறனை விருத்தி செய்தல் மற்றும் பெற்றோர்களுக்கான பயிற்சித் திட்டங்களினூடாக மாணவரிடையே சுகாதாரம் மற்றும் பழக்க வழக்கங்கள் சார் அறிவினை வளர்த்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதுதான் கல்விக்கான உணவு வழங்கலின் இலக்காகும்.

எனினும், யாழ். மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் உணவு வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் உணவு கிடைக்கும் வாய்ப்பை எதிர்காலத்தில் கேள்விக்குறிக்குட்படுத்தலாம். அண்மையில் யாழ்.நகரப் பகுதிக்கு அண்மையிலுள்ள பாடசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட உணவுத் திட்ட மேற்பார்வையின் போது மரக்கறி எண்ணெய் அடங்கிய தகரங்கள் மறைத்து வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டமையும் இதே போன்று வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட உயர்பாதுகாப்பு பிரதேசத்திலுள்ள பாடசாலையில் இருப்புக்கு மேலதிகமாக அரிசி மூடைகள் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் செய்தி வெளியாகியிருந்தமை சகலரும் அறிந்ததே. இது தொடர்பாக யாழ். செயலகத்தினால் ஊடகங்களுக்கு செய்திக்குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அதில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிந்த பிரிவினருக்கு கல்விக்கான உணவாகவும், தாய்சேய் நலத் திட்டத்தின் கீழும் வேலைக்கான உணவாக வழங்கப்படும் பொருட்களை விற்போருக்கும் அவற்றை மாற்றுவோருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் இதனால் இவ் வேலைத் திட்டம் நிறுத்தப்படக்கூடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

பாடசாலைகள் சில, குறிப்பாக அதிபர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஏனைய பாடசாலைகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. உணவுத் திட்ட செயற்பாடுகளின் போது நூறு வீதம் நிறைவாக செய்யாவிட்டாலும் பிள்ளைகள் முழுமையாக பயனடையத்தக்க வகையில் உணவை வழங்குவது காலத்தின் தேவை அல்லவா,?

நிதிவளம் இல்லாத அதுவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்றவை செயற்படாத அல்லது உருவாக் கப்படாத சிறிய பாடசாலைகளில் இக் கல்விக்கான உணவுத் திட்டத்தை முன்னெடுப்பது ஓரளவு சிரமமானது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் பச்சை மரக் கறிக்கென நாள் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு 2 ரூபா உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதனை வைத்தே கறிக்குத் தேவையான உப உணவுப் பண்டங்கள மற்றும் விறகு என்பவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். உணவு வழங்கலின் போது ஏற்படும் மேலதிக செலவை பாடசாலைகள் தான் பொறுப்பேற்கவேண்டும். இச்சூழ் நிலையில் மாணவர்களிடம் உணவு வழங்கலிற்கான சிறிய உதவுதொகையினைத் திரட்டி சில பாடசாலைகள் உணவு வழங்கலை மிகவும் திறம்பட செய்து வருகின்றமையைப் பாராட்டியே ஆகவேண்டும்.

## சடாயு

மேற்குறித்த சங்கங்கள் செயற்படுகின்ற பெரிய பாடசாலைகளில் உணவு வழங்கலுக்காக கணிசமான தொகை மாதம் தோறும் மாணவர்களிடம் அறவிடப்படும் அதேவேளை இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் இடம் பெறுவது அருவருக்கத்தக்கது.

ஏழைப் பிள்ளைகள் குடும்ப கஷ்டநிலை காரணமாக பாடசாலைகளுக்கு செல்வதில்லை. அவ்வாறு சென்றாலும் காலை உணவினை உண்ணாது செல்வதனால் பாடசாலைகளில் மயங்கி விழுதல், கற்றலில் கவனம் செலுத்துவது குறைவாகக் காணப் படுதல் என்பவற்றை கருத்தில் கொண்டே இவ் உணவுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் நலிவுற்ற பிள்ளைகளுக்கு சேரவேண்டிய, கிடைக்கவேண்டிய உணவுத்தேவையினை சுரண்டுவது கவலைக்குரிய விடயமாகும்.

(மாணவர்களுக்கான உணவு பகிரப்படும் விதத்தினையும் அதில் அடங்கியுள்ள கலோரிப் பெறுமானத்தை அட்டவணை காட்டுகிறது.)

மாணவர்களுக்கு உணவு பகிரப்படும் விதத்தினையும், அதில் அடங்கியுள்ள கலோரிப் பெறுமானத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| நாட்கள் | உணவுப்பொருட்கள் | ஒருநாள் பகிர்வு | கலோரி (Keal) | மொத்தக் கலோரி (Keal) |
|---|---|---|---|---|
| 3 நாட்கள் | அரிசி | 100g | 360 | |
| | பருப்பு | 20g | 28 | 130g |
| | எண்ணெய் | 10g | 88 | 476 (Keal) |
| 3 நாட்கள் | CSB மா | 100g | 380 | 120 |
| | சீனி | 10g | 40 | 508 (Keal) |
| | எண்ணெய் | 10g | 88 | |

அடுத்து சமையல் தொண்டர்களைப் பொறுத்தவரை இருநூற்று ஐம்பது மாணவர்கள் வரை உள்ள பாடசாலைக்கு 2 பேரும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 125 மாணவர்களுக்கு ஒரு மேலதிக சமையலாளர் வீதம் நியமிக்கப்படலாம். இவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பகிர்விலும் கூட ஒரு சில பாடசாலைகள் தவறினை விடுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. எவ்வாறெனினும் மாணவர்களின் வயிற்றில் அடிக்காது சரியான முறையில் உணவைத் தயாரித்து வழங்குவதுடன் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களின் சுகாதாரத்திலும் (சாப்பாட்டின் முன், பின் கை கழுவுதல்), கோப்பை கழுவுதல் மற்றும் உணவுடன் சேர்த்து நாகரிகத்தினை (சாப்பிடுதல், உணவினைப் பரிமாறுதல்) மாணவர்களிடையே பழக்குவதிலும் முன்னேற்றப்பாதையில் சென்று இவ்வாறான செயற் திட்டங்கள் நலிவுற்ற மாணவாகளுக்கு சரியான முறையில் மென்மேலும் கிடைக்க அனைவரும் மனச்சாட்சியுடன் செயற்படுவது இன்றியமையாததாகும்.

கல்விக்கான உணவுத்திட்ட தொண்டர்களுக்கான உணவுப்பகிர்வும் அதன் கலோரிப் பெறுமானமும் வருமாறு

| நாட்கள் | உணவுப்பொருட்கள் | ஒருநாள் பகிர்வு | கலோரி (Keal) | மொத்தக் கலோரி (Keal) |
|---|---|---|---|---|
| 1 நாள் | அரிசி | 2.5Kg | 900 | |
| | பருப்பு | 300g | 420 | |
| | சீனி | 150g | 600 | 2950g |
| | | | | 10020 (Keal) |



# பன்றி குரங்குகளின் தொல்லைகளால் குடா நாட்டு விவசாயிகள் திண்டாட்டம்



யாழ் குடாநாட்டின் மேட்டு நிலப் பயிர் செய்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் ஒரு பகுதியாக அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிகளும் காணப்படுகின்றன. சன நடமாட்டம் அற்றுக் காணப்படும் இந்தப் பகுதிகளில் உள்ள பற்றைகள் மரங்களில் மறைந்து இருக்கும் பன்றிகள், குரங்குகளின் தொல்லைகள் விவசாயிகளை பெருமளவில் பாதித்து வருகின்றது..

இவைகள் கிழங்குகள், சிறுதானியங்கள் மற்றும் உப உணவுப் பயிர்கள் உட்பட விவசாயிகளின் அனைத்துப் பயிர்களையும் நாசம் செய்து வருகின்றன. இந்த மிருகங்களின் தொல்லையில் இருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். இந்த மிருகங்களின் தொல்லையென்பது இன்று நாளையுடன் முடிவடையக் கூடிய ஒன்று அல்ல.

இது ஒரு தொடர்கதையாகவே அமையப் போகின்றது என்ற வகையில் இதற்க்கு ஒரு நிலையான செயல் திட்டம் தீட்டப்பட வேண்டிய அவசியமும் தேவையும் காணப்படுகின்றது. யாழ். குடா நாட்டு மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு தொழில் இழந்து வேலையற்று இறக்கும் நிலமையில், இத்தகைய விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் பயிர்களையும் கூட இத்தகைய மிருகங்கள் அழிக்குமாக இருந்தால் கடுமையாக பாதிக்கப்படுவது யாழ் குடா நாட்டு மக்களாகவே என்பதில் எந்த வகையான சந்தேகமும் இல்லை.

(தமிழ்வாணண்)

வலிகாமம் பகுதியில் உள்ள அதிஉயர் பாதுகாப்ப வலயத்தை அண்டிய பகுதிகளான பன்னாலை, இளவாலை, அளவெட்டி, துர்க்காபுரம், கட்டுவன்புலம், கட்டுவன், ஏழாலை வடக்கு, குப்பிளான் வடக்கு, புன்னாலைக் கட்டுவன் வடக்கு, அச்சுவேலி, இடைக்காடு போன்ற இடங்களில் பன்றித் தொல்லைகள் அதிகமாக காணப்படுகின்றன.

இதே போன்று தென்மராட்சிப் பகுதிகளான மீசாலை, மிருசுவில், கெருடாவில், வரணி வேம்பிராய், மட்டுவில், சரசாலை, கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் குரங்குகளின் தொல்லையுடன் பன்றிகளின் தொல்லையும் காணப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் இந்தாண்டு

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### விஷ்வ துளசிக்கு இரண்டு விருதுகள்

மம்முட்டி நந்திதாதாஸ் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கும் விஸ்வ துளசி திரைப்படம் சுமதிராம் என்னும் புதியவரின் இயக்கத்தில் வெளிவந்துள்ளது. கண்ணன் அழகியல் ரீதியில் ஒளிப்பதிவு செய்ய இளையராஜா-எம்.எஸ். விசுவநாதன் இருவரும் இணைந்து இசையமைத்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள ஹீஸ்டனில நடைபெற்ற சர்வதேசப் படவிழாவில் (2005) சிறந்த இசைக்கான ரெமி தங்கவிருது இப்படத்திற்கு கிடைத்துள்ளது. இயக்குநரான சுமதிராமுக்கும் ஒரு விருது வழங்கப்பட்டது. சர்வ்தேசப்பட விழாவில் தமிழ்ப்படமொன்று விருதுகளைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

திரைப்படத்துறைக்குப் புதியவரான சுமதிராம் "திரையுலகில் எனக்கு அதிக அனுபவம் இல்லை இந்த விருது என்னை ஆச்சரியத்துக்குள் ளாக்கியுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

நன்றி-தெரிதல்

# தமிழ்ச் சினிமாவும் கலாசாரச் சீரழிவுகளும்



சினிமா விழிப்புணர்வை ஊட்டக்கூடிய பலம்மிக்கதொரு கலைச்சாதனம். மனித எண்ணங்கள் உணர்வுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய அசாத்திய திறமையுள்ள ஊடகம். இதை தென்னிந்திய தமிழ் சினிமாத் துறையினர் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் தென்னிந்திய தமிழ் சினிமா துன்பியல் நிலை முற்றி வெடிநிலைக்கு வந்துவிட்டது. இந்நிலை அழகியல் ஆழுமையுள்ள ரசிகர்கள், நல்ல பார்வைகொண்ட விமர்சனகர்த்தாக்கள், புதிய முயற்சியில் ஈடுபடும் திரை மேதைகள் போன்றோரை விசனத்துக்குள்ளாக்கிவிட்டது.

இப்போது வெளியிடப்படும் திரைப்படங்கள் தவறான சித்தரிப்புக்களையும் கருத்துக்களையும் வன்முறைகளையும் உச்ச அளவில் வெளிப்படுத்துவதோடு விரகதாபங்ளையும் வெளிப்படுத்துகின்றன.

இப்போதெல்லாம் ஆவணப்படங்கள் நல்ல கதைப்பாங்கான படங்கள் வெளிவருவது குறைவு. இவற்றையெல்லாம் விடுத்து வசூலை மையமாக வைத்தே படங்கள் வெளிவருகின்றன. பாரதிராஜா, சீமான், பாலுமகேந்திரா தங்கர்ப்பச்சான், போன்றவர்கள் இருக்கும் வரைக்கும் சினிமா ரசிகர்கள் ஓரளவிற்கு ஆறுதலடையலாம். அழகி, காதல், நதிக்கரையிலே, விஷ்வதுளசி, சிதம்பரத்தில் ஓர் அப்பாச்சாமி, ஒன்பது ரூபா நோட்டு, பெரியார், என நல்லபடங்களும் வந்திருக்கிறன.

தொடக்க காலத்தில் புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றையும் சுதந்திரவேட்கை, பாட்டாளி மக்களின் ஏழ்மைநிலை ஆகியவற்றையும் படமாக்கி வெற்றிகண்டனர் பின் னர் இசைஜாலத்தாலும் வ்ர்ணக்காட்சி விரிப்பு களாலும் திரைக்குள் நுளைந்த கதாசிரியர் களாலும தமிழ்ப்படங்கள் சலிப்பில்லாமல் ஓடியன.

பின்னர் சினிமா என்ற பூதம் ரசனையை மாற்றி விசித்திரப் புதைகுழிக்கள் ரசிகர்களை விழுத்தியது. அந்த வேளை சினிமா அணிந் திருந்திந்த போலியுருவை, ரசிகர்கள் அவதானிக்கவில்லை. காலத்தின் இயல்பான மாற்றத்திற்குள் தமிழ்ப்படங்களின் உத்திகளும், மாற்றங்களும் புகுந்துகொண்டது.

மாறாக அது கனதி இழந்து ஆரோக்கியமற்ற மாற்றத்திற்கே தன்னை மாற்றியது. இளம் சமுதாயத்தை மைய்பபடுத்தி படங்கள் தாயாரிக்கப்பட்டன. ஹீரோ, ஹீரோயின் வில்லன்கள் மூலம் வன்முறை, அடிதடி, கொலை, கொள்ளை, ஆடைக்குறைப்பு, விரகம், திகில் நிறைந்த காட்சிப் படிமங்கள், நூதனத் துடிப்பூட்டும் ஊசியாக இளசுகள் மீது ஏற்றப்பட்டன. இது அவனை/அவளை எளிதில் வசப்படுத்தி பண்பாடான சமூக மலர்ச்சியிலும், நிஜவாழ்விலும் மாற்றங்களை கொண்டுவந்தது.

இந்த நிலை தமிழ் நாட்டைக் கடந்து யாழ்ப்பாணம், புலம் பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சினிமா படங்கள், அதனது ஹீரோக்களின் பெயரில் (சாமுராய், தீனா) குழுக்களை அமைத்து தமக்கிடையே மோதல்களில் ஈடுபட்டு தமிழன் என்ற நன்முத்திரையைக் கிழித்தனர். புலம் பெயர் நாடுகளிலும் இந்த இழிநிலை காணப்பட்டது.

தெரிந்தோ தெரியாமலோ தவறான காட்சிகள் கட்டிளமைப் பருவத்தினரின் மனதில் பதிந்து விடுகிறன. இது தமிழர் கலாச்சார விழுமியத் தளங்களில் பாதீனியங்களாக வளரத் தொடங்கி விட்டது.

சுட்ட தோசையை மீண்டும் மீண்டும் சுட்டு தங்கள் கையை சுடவிரும்பாத தமிழ் சினிமாத் துறையினர் தங்கள் பார்வையை எமது விடுதலைப் போராட்டத்தின் பக்கம் திருப்பினர். காற்றுக்கென்னவேலி, கன்னத்தில் முத்தமிட்டால், இராமேஸ்வரம், குப்பி போன்ற படங்களை எடுத்து பணத்தை வசூலிக்க தொடங்கி விட்டனர். தென்னிந்தியாவில் மட்டும் வெளியிடப்பட்டு பின்னர் இலங்கைக்கு வரும் படச்சுருள்கள் இப்போது பணவசூல் குவிப்பின் உத்தியின் பிரகாரம் நம்தேசத்து மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஒரே நேரத்தில் திரையிட்டு நம்மவர்களின் வியர்வையில் விழுந்த டொலர்களையும் பவுண்ஸ்களையும் அள்ளிச் செல்லத் தொடங்கிவிட்டனர். (இந்தச் செய்தி புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களுக்கு எட்டுமா? எட்டுவதன் மூலம் இதனைப் புரிந்து கொள்வார்களா? )

எமது விடுதலைப் போராட்டத்தை மையப் படுத்தி படமாக்கப்பட்ட படங்கள் எவையுமே எமது வலிகளை, துன்ப துயரங்களை உயிர் இழப்புக்களை, சொத்திழப்புக்களை மற்றும் புல சித்தரிக்கவில்லை. மாறாக எங்களது சொல்லொணாத்துயரங்களை சினிமா ஊடாக மலினப் படுத்தி எமது உணர்வுகளை கொச்சைப்படுத்தி விட்டனர் என்றே கூறமுடியும். இதை தட்டிக் கேட்டால் சட்டச் சிக்கல்கள் என்று வியாக்கியானம் கூறும் இந்திய படத்தயாரிப்பாளர்/ கதாசிரியர்களுக்கு இதனூடாக சொல்ல விரும்புவது என்னவென்றால் எங்களுக்குரிய படைப்புகளை நாங்களே படைப்போம். அதை ஒரு போதும் உங்களால் படைக்க முடியாது என்பது தான்.

**- சுதேசிகன் -**

தென்னிந்திய சின்மாத் துறையினர் ரசிகர்களின் மனதில் நல்ல செய்திக்குப் பதிலாக தீய கருத்துக்களையே விதைத்தனர். இதற்கு நன்றியுபகாரமாக, திரைக் குழுவினரின் பிச்சைப் பாத்திரங்களை நம்மவர்கள் நிறைத்தனர். இவற்றுக்கெல்லாம் விளம்பரங்கள், சினிமாப் பட முன்னோட்டங்கள் என்று சொல்லி அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், இணையத்தளங்கள் போன்றவை சினிமாவுக்கு சார்பாக ஒத்தூதும் நாதஸ்வரங்களாகி விட்டமை வேதனைக்குரிய விடயமாகும் (எமது தேசிய,பிராந்திய பத்திரிகைகளும் உள் ளடக்கம்)

இருந்தும் தரமான தமிழ் மற்றும் மாற்று மொழிப் படங்களை தேடியெடுத்து காட்சிப்படுத்தும் யாழ் பல்கலைக்கழக திரைப்படவட்டம் அது பற்றிய ஆரோக்கியமான கருத்துப்பகிர் வினையும் செய்து வருகிறது. எமது இளசுகள் இலவசமாக காட்சிப் படுத்தப்படும் இத்தகைய படங்களைப் பார்க்க முயலவேண்டும். அப்போதுதான் தமிழ் சினிமாப் படங்களின் மிக மோசமான, கேவலமான நிலையை புரிந்துகொள்ளமுடியும்.

### இலங்கை தமிழ்த் திரைப்படங்கள்

இலங்கையில் இதுவரை 28 தமிழ்த் திரைப்படங்கள் (திரைப்படச் சுருளில்) உருவாக்கப் பட்டிருக்கின்றன. "சமுதாயம்" என்ற முதலாவது திரைப்படம் 1962 இல் கென்றி சந்திரவன்ஸ என்பவரால் 16 மி.மீ படமாக உருவாக்கப்பட்டது 28 வது படமான "ஷர்மிலாவின் இதயராகம்" 1993 இல் உருவாக்கப்பட்டது.

பாசநிலா என்ற படமும் 16 மி.மீ படமாகும் "பொன்மணி" (1977) "வாடைக் காற்று" (1978) "குத்துவிளக்கு" (1972) ஆகிய படங்கள் வித்தியாசமான அம்சங்களைக் கொண்ட கவனத்திற்குரிய படங்களாகும் "பொன்மணி" படத்தின் நெறியாளர்-அவ்வேளை யாழ் வளாகத்தில் சிங்கள மொழி விரிவுரையாளராக இருந்த தர்மசேனபத்திராஜா ஆவார். இவர் தனது சிங்களப் படங்களிற்காக வெளிநாடுகள் சிலவற்றின் திரைப்பட விழாக்களில் பாராட்டுப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி-தெரிதல்

## கமோஸ்பானி என்ற மாற்று சினிமா பற்றி...

கதாசிரியர்
சபிகா சுமர்



அமைதி தழுவும் விவசாயக்கிராமம் சார்க்கி.பெருநகரான ராவல்பிண்டியிலிருந்து அதிகளவு தொலைவில் இல்லாமல் ஆனால் ஒருபுறத்தில் ஒதுக்காக இது பாகிஸ்தானிய பஞ்சாப்பில் உள்ளது. இரு நடுத்தர வயதுள்ள பெண்கள் ஈரமான நீண்ட துணியொன்றினை கொடியில் உரலவிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி ஆயிசா. 18 அல்லது 19 வயது இளைஞனான சலீமின் விதவைத் தாய். மற்றப்பெண் அயல் வீட்டில் வசிப்பவள். தன்வாழ்வில் எல்லாமுமே தன்மகன் சலீமின் தானென்று வாஞ்சையுடன் கூறுகிறாள் அவள். சலீம்மீது அவளுக்கிருக்கும் முழுஅளவிலான நம்பிக்கையையும் அளவற்ற பாசத்தையும் வெளிப்படுத்துகிறாள் ஆயிசா. இதற்கு அவள் காரணத்தையும் விபரிக்கிறாள். நீண்டகாலம் பிள்ளைப்பேறில்லாது இருந்து கடும் பிரார்த்தனைகளின் பயனாக அவனைப் பெற்றெடுக்கும் பாக்கியம் தனக்கு கிடைத்ததாகப் பெருமையுடன் புரிக்கிறாள் அவள். சுருக்கமாக கூறப் போனால சலீம் தான் அவளது வாழ்க்கை. எல்லாவற்றையுமே அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த அயல் வீட்டுப் பெண மிக நிதானத்துடன் "பிள்ளைகள் எப்போதுமே பெற்றோருக்கு அருகிலிருக்கப் போவதில்லை. எனவே எவையும் எமக்குச் சாசுவதமான சொந்த மல்ல" என்கிறாள். திரைப்படத்தின் ஆரம்பப் பகுதியில் வரும் உரையாடல் தான் இது. ஒரு வகையிலான நுண் ணுணர்வுடன் கூடிய அழுத்தம் நிறைந்த தொனி இந்த உரையாடலில் இழையோடி ஒலிக்கிறது. கமோஸ்பானி திரைப்படம் அடிப்படையில் ஒரு அரசியல் திரைப் படமாகும். இது இன.மத. சமூக முரண பாடுகளையும் எவ்வாறு மதம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அடிப் படைவாதமாக உருவெடுக்கும்போது தாய் - மகன், காதலி காதலன் போன்ற மிக நெருக்கமான மனித உறவுகள் கூட அந்நியப்பட்டு அவற்றின் அர்த்தங்களை இழந்து சிதைந்து போகின்றன என்பதையும் மூடத்தன மிக்க பிரசாரங்களுக்கு சமூகம் எத்தகைய விசாரணைகளு மின்றி எளிதில இலக்காகி இரையாகிப்போகின்றது என்பதையும் சித்திரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிபர்களுக்கு வாழ்வளிக்கும் கைதடி சாந்தி நிலையம்



வயோதிபர்கள் இளைய சமுதாயத்தின் சொத்துக்கள். அவர்களைப் பாதுகாப்பது இளைய சமுதாயத்தின் தலைய கடமையாகும். எம் முன்னோர்களின் வாழ்க்கை முடிவடையும் வரை அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றவாறு நாம் செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாட்டை கைதடியிலுள்ள சாந்தி நிலையம் செய்து வருகின்றது.

சமூகசேவைகள் அமைச்சின் நிதியுதவியுடன் ஆதரவற்ற வயோதிபர்களை பராமரிப்பதற்காக கைதடி சாந்தி நிலையம் இயங்கி வருகின்றது. ஆண்கள், பெண்கள் என சுமார் 178 வயோதிபர்கள் சாந்தி நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவருகின்றனர். அவர்களுக்கு தேவையான உடை, உணவு, உறையுள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறன.

**திருமண வைபவங்கள், ஆண்டு விழாக்கள், மற்றும் ஆண்டுத் திவசம் போன்ற விசேட நாட்களில் ஒரு தொகைப்பணம் செலுத் தினால் விசேட உணவு வழங்கப்படும்**

ஆண்களுக்கு தனியாகவும் பெண்களுக்கு தனியாகவும் கட்டடங்கள் அமைக்கப்பட்டு பல்வேறு வசதிகளோடு அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கைதடி சாந்தி நிலையத்தில்,



பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள், மரு மக்களால் துரத்தப்பட்டவர்கள், அனாதைகள், சித்த சுவாதீனமற்றவர்கள் மற்றும் பிள்ளை களுக்கு கஷ்டம்கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் வந்தவர்கள் என பல்வேறு காரணங்களுக்காக தமது உறவுகளைவிட்டு வந்த வயோதிபர்கள் தங்கியுள்ளனர்.

இவ்வாறானவர்களை தமது பெற்றோர்கள் போல் பாதுகாக்கும் பணியாளர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். தமக்கு இடைஞ்சலாக இருப்பதாகத் தெரிவித்து சிலர் தமது தாயை அல்லது தந்தையை சாந்தி நிலையத்தில் ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் மீண்டும் அங்கு சென்று தமது உறவுகளைப் பார்ப்பதில்லை. இதனை அங்குள்ள பெற்றோர் கூறுவதைக் கேட்கும்போது கவலையை ஏற்படுத்துகின்றது. தமிழர் கலாசாரத்தில் வயோதிபர்களைப் பாதுகாப்பதென்பது ஒவ்வொரு பிள்ளைகளினதும் கட்டாய கடமை. ஆனால், மேற்கத்தைய நாட்டுக் கலாசாரங்கள் தமிழர் கலாசாரத்தை ஆட் கொண்டுள்ள நிலையில் பெற்றோரை முதி யோர் இல்லத்தில் சேர்க்கும் பண்பாடு பெருகி வருகின்றது.

இவ்வாறன நிலையில் சாந்தி நிலையம் வயோதிபர்களுக்கு தஞ்சமளித்துள்ளது. இங்கு கணவன்- மனைவி, தாய் - மகள், ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் போன்றவர்களும் பராமரிக்கப்பட்டுவருகின்றனர். சாந்தி நிலையத்திலுள்ள அனைவருக்கும் கட்டில் வசதிகள், நேரத்திற்கு நேரம் சாப்பாடு, இறைவழிபாடுகள், போதனைகள், மற்றும் கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறுகின்றன.

## பொழுது போக்கு

வானொலி கேட்பது தொலைக்காட்சி பார்ப்பது போன்ற பொழுது போக்குகளுக்கு அங்குள்ள வயோதிபர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இதைவிட கலை நிகழ்ச்சிகள் பாடல்கள் என்பவற்றை நேரில் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அவர்கள் ஆவலாக உள்ளனர்.

இதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்கள் மற்றும் கலைத்துறை சார்ந்தவர்கள் அங்கு சென்று தமது படைப்புக்களை முதியவர்களுக்கு வழங்கவேண்டும்.

## வைத்தியர் தேவை

கணேசமூர்த்தி தலைமையிலான அலுவலர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் என பலர் அங்கு கடமையாற்றிவருகின்றனர். பகல், இரவு என்பன கடமை நேரங்கள் பிரிக்கப்பட்டு ஆண்களுக்கு ஆண் உதவியாளர்களும் பெண்களுக்கு பெண் உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். வ்யோதிபர்களின் வேண்டுகோள்களுக்கு ஏற்றவாறு அங்கிருப்பவர்கள் கடமையாற்றுவதைப் பார்க்கும்போது அவர்களின் கண்ணியத்தன்மை புலப்படுகின்றது.

**கலைகளில் ஆர்வம் உள்ளதால் அவற்றை ரசிப்பதற்கு அங்குள்ள வயோதிபர்கள் விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்கள் அவர்களுக்கு நிகழ்ச்சிகளை வழங்க முன்வர வேண்டும்.**

எனினும், அங்கு விசேட வைத்தியர் ஒருவர் இல்லாமையானது பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. சாந்தி நிலையத்தில் உள்ளவர்களில் பலர் இரத்த அழுத்தம் இருத நோய், ஆஸ்மா, போன்ற உபாதைகளுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு எந்நேரமும் வைத்திய உதவி தேவைப்படுகின்றது. இந்நிலையில் அங்கு விசேட வைத்தியர் இல்லை என்பது மிகப்பெரிய குறைபாடாக உள்ளது. கைதடி வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் சாந்தி நிலையத்தில் உள்ளவர்களுக்கு சேவை செய்வார். அவர் இல்லாத நிலையில் பெரும் கஷ்டங்களை அங்குள்ள வயோதிபர்கள் எதிர்நோக்கியுள்ள னர். வைத்தியர் ஒருவரை நியமிப்பது தொடர் பாக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதும் இன்னும் அவை நிறைவேற்றப்படவில்லையென அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.



*கைதடி முதியோர் இல்லத்திலுள்ள கணவனும் மனைவியும்*

## முறைப்படி இறுதிச்சடங்கு

சாந்தி நிலையத்திலுள்ள வயோதிபர்களின் முழு விபரங்களும், நிர்வாகத்தினரால் பேணப்பட்டு வருகின்றது. அவர்கள் தொடர்பான தகவல்கள் அவர்களின் உறவினர்களுக்கு அல்லது அயலவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும். அவர்கள் இறந்தால் உடனடியாக அறிவிப்பு வழங்கப்படும்.

இந்நிலையில் உறவினர்கள் விரும்பினால் சடலம் அவர்களிடம் கையளிக்கபபடும். அவர்கள் விரும்பாத நிலையில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் அங்குள்ள முதியோர்கள் முன்னிலையில் கைதடி பெரிய காடு மைதனாத்தில் சமய முறைப்படி இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

**S.K. தீபன்**

### இளைய சமுதாயத்திற்கு வேண்டுகோள்

வயோதிபர்களை சாந்தி நிலையங்களில் ஒபபடைப்பது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எம்மைப் பெற்றுவளர்த்து ஆளாக்கிய அவர்களை இறுதிநேரத்தில் கைவிடுவது என்பது மிகவும் துரோகமான செயலாகும். அவர்களை இறுதி நேரத்தில் காப்பாற்றயு வேண்டியது ஒவ்வொரு பிள்ளையினதும் தலையாய கடமையாகும். நாமும் இறுதியில் வயோதிபர்களாவோம் என்பதை ஒவ்வொரு இளைய சமூகத்தினரும் உணர்ந்து அதன்படி செயற்படுவது சாலச் சிறந்தது.

# கலாசார முறைகளில் மாற்றம் வேண்டும்

*யாழ்ப்பாண கலாசார மாற்றம் தொடர்பாக தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் யாழ்.ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆண்டகை எழுத்தாணிக்கு வழங்கிய விசே செவ்வி.*

*செவ்வி கண்டவர்: கி.சுரேஸ்*

யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் மாற்றம் அடைந்து வருவதாக பல தரப்பட்டவர் களிடமிருந்து தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வந்து கொண்டு இருக்கிறது. இதில் உண்மை உள்ளதா? அல்லது வீண் குற்றச்சாட்டா? என கண்டறிய ஊடகவியல் மாணவர்கள் நாம் முற்பட்டோம். அதற்காக தென் இந்திய திருச்சபையின் ஓய்வு பெற்ற ஆயர் ஜெபநேசன் அடிகளாரை சந்தித்து உரையாடிய போது நாம் கேட்ட சில கேள்விகளுக்கு அவரது பதில்கள்.

யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் உண்மையாகவே மாற்றமடைந்துள்ளதா?

இல்லை. சுபாவம், கலாசாரம் வேறில்லை. அந்தவகையில் கலாசாரம் மாறவில்லை

சாதி வேற்றுமைகள், சீதன முறைகள் மாறவில்லை. சில பண்பாட்டு மாற்றங்களை காண்கிறோம். எங்களுடைய உடை, போக்குவரத்து, வீட்டு அமைப்பு, உணவுப்பழக்கங்கள் என்பவற்றில் மாற்றம் உள்ளது. இவை மேலைத்தேய மோகத்தால் இங்கு வந்து கொண்டு இருக்கிறது.

திருமணச் சடங்கில், மரண வீட்டில் வீடியோ எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்புவது இறந்த உடலை நாட்கணக்கில் எம்பாம் பண்ணி வைப்பது

இப்படி புதிய விடயங்கள் வந்துள்ளது. ஆனால் 1983ம் ஆண்டுக்கு முன்பு இப்படி இல்லை.

இறந்தவரை உடனடியாக புதைத்தோ அல்லது எரித்தோ விடுவார்கள். மரண வீட்டில் வீடியோ எடுப்பதில்லை. பிறந்தநாள் கொண்டாட்டங்கள் ஆடம்பரமாக நடப்பதில்லை. பூப்புனிதநீராட்டு விழா நடப்பதில்லை.

இம்மாற்றங்கள் எல்லாம் 1983க்கு பிறகு எம்மவர் வெளிநாடு சென்று அங்கு கண்ட கற்றவற்றை இங்கு கொண்டு வந்தனர். பூப்புனித நீராட்டு விழா முன்பு வயது முதிர்ந்தர்கள் முன்நின்று செய்யும் சடங்கு. இன்று பக்கத்து வீட்டு அண்ணா, முன் வீட்டு அக்கா வீடியோ மாமா செய்யும் சடங்காக போய்விட்டது. எனது கருத்தும் ஆசையும் ஒன்றுதான். மற்றவரை அடிமைப்படுத்தி, அவமானப்படுத்தி, ஒதுக்கி வைத்து பிரித்துப் பார்த்து சுறண்டி வாழ உறு துணையாக இருக்கும் எமது கலா சாரத்தில் உள்ள தேவையில்லாத கொள்கைகள், நம்பிக்கைகள், பிடிவாதங்கள் என்று மாறுகின்றதோ அன்றுதான் நான் கலாசாரமாற்ற மடைந்துள்ளதாக ஏற்றுக்கொள்வேன். மற்றபடி தேவையான சில புதிய பழக்கங்கள் வந்துள்ளன. சில அளவுக்கு அதிக மாக ஆதிக்கம் செலுத்துகின்றன. இருப்பினும் வேண்டாத பல இன்னும் எம்முடன் ஒட்டியுள்ளது அதுவும் மாற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி இழந்தோர் வாழ்விற்கு ஏற்றும் வாழ்வகம்

கணனி கற்கைநெறி திறப்புவிழாவின்போது வாழ்வக மாணவர்கள்.



பார்வை இழப்பு என்பது இன்று நேற்றல்ல மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே மனித குலத்தைப் பீடித்து வருகின்ற ஒரு பிரச்சனையாக உள்ளது. இந்த விஞ்ஞான யுகத்தில் கூட இநத பார்வை இழப்பை முற்றாக தடுத்து நிறுத்தி விட யாராலும் முடியவில்லை. யாதேனுமொரு காரணத்தினால் ஒருவர் தன் கண்பார்வையை இழந்துவிட்டாரனால் அத்தோடு அவரது வாழ்வே முடிந்துவிட்டது என்று கருதிய ஒரு காலமுண்டு. ஆனால் இன்று பார்வை இழப்பு ஒருவரின் வாழ்வு முன்னேற்றத்திற்குதடை இல்லை என்கிறார் வாழ்வகத்தின் இன்றைய தலைவர் திரு.ஆ.ரவீந்திரன் அவர்கள்.

உரிய வாய்ப்புக்கள் வசதிகள் முக்கியமாக கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்படும்பட்சத்தில் பார்வையற்றவர்களாலும் சிறப்பாக கௌரவமாக வாழமுடியும். அகக்கண்களாலும் அறிவுக் கண்களாலும் இவ்வுலகைக் தரிசித்து அதன் போக்குகளுக்கு தன்னை இயைபாக்கிக் கொள்ளவும் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி வருகின்றது யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் இயங்கி வரும் வாழ்வகம்.

கண்பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாடுடையவர்களின் வாழ்வை வளம்படுத்தும் நோக்குடன் இயங்கி வரும் ஒரு தர்ம ஸ்தாபனமாக இவ் வாழ்வகம் 1988ஆம் ஆண்டு தெல்லிப்பழையூில் ஆரம்பிக்கப்பட்டது. மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட கல்வி டிப்ளோமாவை இலங்கை ஒரு முகப் படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று, ஆசிரியையாக யாழ்ப்பாணத்தில் கடமைாற்றிய அமரர் செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் விடா முயற்சியினாலும் பல அன்பர்களின் உதவிகளினாலும் வாழ்வகத்தின் பணிகள் ஆரம்பமாகின.

வாழ்வகம் மெல்ல மெல்ல தனது பணிகளை முன்னெடுத்து விரிவுபடுத்தி வந்த வேளையில் 1990ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர நேர்ந்தது. யாருமே மனம் தளராமல் உடுவில் கிராமத்தில் மல்வம் பகுதியில் வாழ் வகத்தின் பணி மீண்டும் தொடர்ந்தது.

எனினும் 1995இல் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின்போது வாழ்வகத்தின் பெருமளவான வளங்கள் இழக்கப்பட்டன. இந்நிலையிலேயே 1997ஆம் ஆண்டு மானிப்பாயில் வாழ்வகம் தனது பணிகளை முன் னெடுத்த வேளையில் இலண்டனில் உள்ள தமிழ் அநாதைகள் நம்பிக்கை நிதியத்தினர் வழங்கிய ஒரு தொகைப்பணத்தினைக் கொண்டு தற்போது வாழ்வகம் தலைநிமிர்ந்து நிற்கும் 32 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. வடபிரதேசத்துக்கான புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் அடிப்படை கட்டமைப்புக்களை வழங்கியது. இதன் மூலம் 09-03-2002ஆம் ஆண்டு சொந்த இடத்தில் மீண்டும் வாழ்வகம் இயங்க ஆரம்பித்தது.

படிப்படியான வளர்ச்சிகளுடனும் பல்வேறு கட்டமைப்பு வசதிகளு டனும் வளர்ச்சி கண்டுள்ள வாழ்வகம்., கடந்த 23-03-2008 அன்று கணணிப்பிரிவை ஆரம்பித்தது. இது இங்கு வாழும் பிள்ளை களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் என்று பெருமையுடன் கூறுகிறார் இன்றைய தலைவர் திரு.ஆ. ரவீந்திரன்.

வாழ்வகத்தின் அன்னை அமரத்துவம் அடைந்தது பேரிழப்பாக இருந்த போது அவரது முதன்மை மாணவனின் தலைமையிலே வாழ்வகம் சிறப்பாக இயங்கி வருகின்றது. 12 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வகத்தில் இன்று 34 மாணவர்கள் தங்கியிருந்து கல்வியை தொடர்கின்றனர்.

வாழ்வகத்தை இன்று வழி நடத்தும் தலைவர் ஆ.ரவீந்திரன் முது கல்வியல் மாணிப்பட்டம் பெற்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார். வாழ்வக மாணவனாக மட்டக்களப்பைச் சேர்ந்த இருதயராஜன் முது கல்வியியல்மாணி படிப்பை நிறைவு செய்துள்ளார்.

(வாழ்வகத்தின் பார்வையற்ற மாணவர்களிற்கான கணனி பயிற்சிநெறித் திறப்பு விழா)



தற்போது ஸ்ரனிஸ் - அற்புதராஜ் என்ற வாழ்வக மாணவன் கொழும்பு பல்கலைக் கழகத்திலே சட்ட மாணிப்பட்டம் பெற்று வெளியேறியுள்ளார். மேலும் 10 மாணவர்கள்பட்டதாரிகளாகி ஆசிரியர்களாகவும் வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். தற்போது பயின்று கொண்டிருக்கும் மாணவர்களில் யோ.சுதாகரன் 2007 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை யிலே சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்வ தற்கு காத்திருக்கின்றார். இன்னொரு மாண வன் இசைத்துறையிலே அகில இலங்கை ரீதியில் இருமுறை தங்கப்பதக்கம் பெற்றதோடு யாழ்ப்பாணத்தில் பல்வேறு விழாக்களில் வாழ்வக மாணவர்களுடன் சேர்ந்து இசைக்கச்சேரியினை நடாத்துகின்றார்.

**யோ- கோணேஸ்**

தற்போது கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களது வாழ்வை முன்னேற்ற வேண்டிய பாரிய பணி வாழ்வகத்திற்கு உள்ளது எனவும் அப்பிள்ளைகளின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் தான் மிகவும் உள்ளம் பூரித்து சந்தோசம் அடைவதாகவும் தெரிவித்தார் வாழ்வகத் தலைவர் திரு.ஆ.ரவீந்திரன்.

தற்போது வாழ்வகத்திலுள்ள பிள்ளைகளைவிட பல மடங்கு அதிகமான பிள்ளைகள் விழிப்புலன்களை இழந்தோ அல்லது குறைபாடுடையவர்களாகவும் வாழ்வில் முன்னேறுவதற்கு வாய்ப்புக்கள் ஏதுமற்ற நிலையிலுள்ளனர். அவர்களையும் அரவணைத்துக் கொண்டு அவர்களது வாழ்வையும் வளம்படுத்த வேண்டிய பாரிய பணி வாழ்வகத்தின் முன்னே விரிந்து கிடக்கின்றது. தற்போதுள்ள பிள்ளைகளின் கல்விவாய்ப்புக்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு நிதி மற்றும் வேறு உதவி களும் தேவைப்படுகின்றது அப்பணியினை நிறைவேற்றுவதற்கு நல்லிதயம். படைத் தோரின் உதவிகளையும், ஒத்துழைப்புக் களையும் நாடி நிற்கிறோம். வாழ்வகத் தின் கரங்களோடு உங்கள் கரங்களையும் இணைத்து கொள்ளுங்கள் அதுவே பார்வையற்ற பிள்ளைகளின் வாழ்வை வள்ம்படுத்தும் என அதன் தலைவர் கூறினார்.

---

# செய்தியான ஊடகவியலாளன்

**மயில்வாகனம் நிமலராஜன்**



*யாழ்ப்பாணத்தில் இன்றைய யுத்த சூழ்நிலையில் பத்திரிகையாளர் நிமலராஜனின் மரணம் அனைத்து பத்திரிகையாளர்கள் மத்தியிலும் பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலமையானது தமிழ் மக்கள்படும் இன்னல்களை, யுத்தத்தின் கொடூரத்தை வெளிக்கொணருவதில் தடையை ஏற்படுத்தும் என்பது உண்மை. (ஆசிரியர் தலையங்கம் - வலம்புரி : 22.10.2000)*

யாழ்ப்பாணத்தில் இன்றைய யுத்த சூழ்நிலையில் பத்திரிகைப் பணியென்பது மிகவும் கஷ்டமானது. அப்பணியை மேற்கொள்வதற்கு துணிவு, விடாமுயற்சி என்பன தேவை அவை அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த ஊடகவியலாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜன்.

தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்று தமிழ், சிங்களப் பத்திரிகைகளிலும் வானொலி போன்ற ஊடகங்களுக்கும் ஒரே நேரத்தில் பணியாற்றக்கூடிய வல்லமை மிக்கவராக நிமலராஜன் விளங்கினார்.

நடுநிலை கொண்ட சுதந்திர ஊடகவியலாளரான நிமலராஜன் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மட்டுமல்லாது பல சிங்களப் பத்திரிகைகளுக்கும் பணிபுரிந்துள்ளார். அரசியல் வார ஏடாகிய 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகை, சூரியன் எவ்.எம், பி. பி. சி, ஐ. பி. சி. போன்ற சர்வதேச, உள்ளூர் வானொலி களுக்கும் யாழ்.குடாநாட்டு செய்தியாளராக பணிபுரிந்தார்.

'சிரித்த முகத்துடனும் இனிமையான பேச்சுடனும் எப்போதும் எளிமையான தோற்றத்துடனும் காணப்பட்ட இவர் நீதியும் நேர்மையும் நடுநிலைமையும் கண்ணியமும் பொறுப்பும் துணிவும் மிக்க ஒரு பத்திரிகையாளன்' என யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

நிமலராஜனின் பெற்றோர் யாழ்ப்பாணம் சுண்டுக்குழியை சொந்த இடமாகக் கொண்டவர்கள். அவர்கள் கொழும்பில் வசித்து வருகின்றனர்.

11.05.1961 ஆம் ஆண்டு பிறந்த நிமலராஜன் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர்.

கொழும்புச் சூழ்நிலையில் வாழ்ந்த காரணத்தினால் சிங்களம் ஆங்கிலம் போன்ற மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

நிமலராஜனின் தந்தையார் பதிப்பகத்துறை சார்ந்த தொழிலில் ஈடுபட்டதால் நிமலராஜனின் ஆர்வமும் அந்தத் துறையிலேயே காணப்பட்டது.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் கொழும்பு நகரில் வாழ்ந்த தமிழர்களை மட்டுமல்ல வடக்கு கிழக்கில் வாழ்ந்த கணிசமானவர்களை வெளிநாடுகளுக்கு புலம்பெயரச் செய்த நிலையில் நிமலராஜனின் பெற்றோர் தாய் மண்ணின் மீது கொண்ட ஆர்வம் மேலீட்டால் யாழ்ப்பாணத்திற்கு புலம்பெயர்ந்தனர்.

*எனது நண்பரும் துணிச்சலும் மிக்க பத்திரிகையாளரும் செய்தித் தொடர்பாளருமான உலக அரங்கில் எமது இனத்தின் அவலங்களை ஒலிக்கச் செய்த் நண்பன் மயில்வாகனம் நிமலராஜனினதும் படுகொலை தனிப்பட்ட முறையில் எனக்கும் நான் சார்ந்த குடாநாட்டு தமிழ்ச் சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.*

*அமரர் தி.மகேஸ்வரன், (முன்னாள் பா.உ, யாழ்.மாவட்டம்)*

எனினும் நிமலராஜனின் சகோதரர்கள் வெளிநாடு சென்று அவரை வருமாறு பல தடவைகள் அழைப்பு விட்ட நிலையிலும் அவர் அங்கு செல்லவில்லை. 1987களில் யாழ். குடாவில் வெளிவந்த முரசொலி பத்திரிகையில் விளம்பர சேகரிப் பாளராகவே நிமலராஜன் ஊடகத்துறையில் நுழைந்தார்.

பின்னர் ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளிலும் விநியோக மேற்பார்வையாளராகவும் விளம்பர சேகரிப்பாளராகவும் கடமை புரிந்தார்.

பல்வேறு இடங்களுக்கு கடமை நிமித்தம் சென்ற நிமலராஜன் தான் செல்லும் இடங்களில் காணப்பட்ட சம்பவங்களை செய்தியாக்கி தனது நிறுவனத்துக்கு வழங்கி வந்தார்.

1990இல் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளை செய்திகளாக்கி சர்வதேச மற்றும் உள்ளூர் பத்திரிகைகள், வானொலிகளுக்கு வழங்கி வந்தார்.

இதன் மூலம் அவர் ஒரு செய்தியாளனாக சர்வதேசத்துக்கு தன்னை இனங்காட்டிக் கொணடார். தன்னை ஒரு செய்தியாளனாக இனங்காட்டிக் கொண்ட நிமலராஜன் பிரபல்யமான யாழ்.குடாநாட்டு ஊடகவியலாளனாக திகழ்ந்தார்.

நிமலராஜன் ஊடகங்களுக்கு வழங்கிய செய்திகளால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. இதன் மூலம் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வும் ஏற்பட்டது.

இந்நிலையில் 2000ஆம் ஆண்டு ஐப்பசி 19ஆம் திகதி இரவு பத்துமணியளவில் தனது வீட்டிலிருந்த நிமலராஜன் ஆயுதக் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென்னிலங்கையில் ஜே.வி.பி காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்த ரிற்சார்டி சொய்சா, குண்டர்கள் சிலரால் படுகொலை செய்யப்பட்டார்.

*தேசிய சமாதானக் குழு அனுதாபம்*

*யாழ்.பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை குறித்து கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் தேசிய சமாதானக் குழுவினர் அறிக்கையில், 'இத்தகைய செயலகள் பொதுமக்களின் நடுநிலமைக் கருத்து வெளியீடுகளுக்கு தடையாக அமையும் என நாம் வலியுறுத்துகின்றோம்". தினக்குரல் 21.10.2000*

அதேபோன்று நிமலராஜனும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். நிமலராஜனின் மரணத்தைக் கேட்ட ஊடக அமைப்புக்கள் அதிர்ச்சி அடைந்தன. சிறந்த ஊடகவியலாளன் ஒருவன படுகொலை செய்யப்பட்ட செய்தி உலகெங்கும பரவியன. ஊடக அமைப்புக்கள் பத்திரிகை நிறுவனங் கள் அரசியல் பிரமுகர்கள் சமயத தலைவர்கள் எனப் பலரும் தமது கண்டனத்தை வெளியிட்ட னர்.

**எஸ்.கே.எஸ்**

இவ்வாறான செயற்பாடுகள் இனியும் இடம்பெறக்கூடாது என பல்வேறு தரப்பினரும் கோரிக்கையும் வேண்டுகோள்களும் விடுத்த போதும் நிமலராஜனின் கொலைக்குப் பின்னரும் பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் தாக்கப்படும்போதும் படுகொலை செய்யப்படும்போதும் பல்வேறு தரப்பினரும் கண்டனங்களை வெளியிடுகின்றனர். எனினும் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்வருவதில்லை. குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் இருந்துகொண்டே உள்ளது. சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலமை மாறவேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் 'நர்கிஸால்' வரலாறு காணாத பேரழிவு

# பலியானோர் எண்ணிக்கை ஒரு இலட்சமாக உயர்வு

யங்கூன்: மியன்மாரை 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை கடும் சூறாவளி தாக்கியதில் 100,000 க்கும் மேற்பட்டோர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ள அதேவேளை, பல்லாயிரக்கணக்கான வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தமான் அருகே வங்காள விரிகுடாவில் உருவாகி வடகிழக்காக நகர்ந்த இச்சூறாவளி, ஞாயிறு மாலை மியன்மாரைப் பலமாகத் தாக்கியது.

நர்கீஸ் என்ற இச்சூறாவளியானது மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்ததால் வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டும் கட்டிடங்கள் பலத்த பாதிப்புக்குமுள்ளாகின. மரங்கள், மின்சார மற்றும் தொலைபேசிக் கம்பங்களும் அடியுடன் சரிந்தன.

இதனால், மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்பு சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீதிகளில் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள இயலாத நிலையும் காணப்படுகின்றது.

கடல் அலைகள் சுமார் 12 அடி உயரத்துக்கு மேல் எழுந்து கடற் கரைப் பிரதேசத்தைத் தாக்கியதால் கரையோரப் பிரதேசங்கள் பாரிய சேதங்களுக்குள்ளாகின.

அத்துடன் கடலுக்குச் சென்ற மீனவர்களின் நிலை பற்றி இதுவரை எந்தத் தகவல்களும் இல்லையென்றும் அவர்களைத் தேடும் பணியில் இராணுவ ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, பல கிராமங்கள் முற்றாக அழிந்து போயுள்ளதுடன் இறாவாடிஸ் லபுட்டா நகரின் 75 வீதமான கட்டிடங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன.

மேலும் யங்கூனிலுள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த விமானங்கள் அனைத்தும் இடையிலேயே திரும்பி மண்டலேய் விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டன.

இச்சூறாவளி தொடர்பாக மியன்மாரிலுள்ள மனித நேயப் பணியாளர் ஒருவர் தெரிவிக்கையில்;

''மியன்மாரை 120 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கிவரும் நர்கீஸ் சூறாவளியினால் அப்பகுதியில் பாரிய உயிர்ச்சேதமும் கட்டிடச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

மேலும் மருத்துவமனைகள், பாடசாலைகள், ஹோட்டல்கள் என்பனவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் இடம்பெயரும் மக்களும் தங்குவதற்கு இடமின்றித் தவிக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருக்கும் அதேவேளை, குடிநீர், உணவு மற்றும் மின்சார வசதிகளின்றி மக்கள் அல்லல் படுகின்றனர்.

மீட்புப் பணிகளில் இராணுவத்தினரும் ஏனைய அவசர உதவி அமைப்புகளும் ஈடுபட்டிருந்தும் கடும் மழை பெய்து வருவதால் மீட்புப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றது.





## தமிழ் திரையுலகின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு

# கருணாநிதி, ஜெயலலிதாவை அழைக்க முடிவு

சென்னை:சென்னையில் நடக்கும் தமிழ் திரையுலகின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு தமிழகத்தின் முதலமைச்சர் கருணாநிதியையும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவையும் அழைக்க தென்னிந்திய நடிகர் சங்கம் முடிவு செய்துள்ளது.

நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நிகழ்ச்சி, தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் சென்னையில் நேற்று நடந்தது. நடிகர்கள் என்னத்தே கண்ணையா, எம்.எல்.ஏ.தங்கராஜ், குள்ளமணி உட்பட 50 பேர் ஓய்வூதியம் பெற்றனர்.



மும்பையில் நடைபெற்ற ஷோபாடேயின் சுப்பஸ்ரார் இந்தியா புத்தக வெளியீட்டு விழாவில பாலிவூட் நடிகர் அமிர்தாப் பச்சன் ரேஷ்மி தாக்கரேவுடன் உரையாடும்போது...

இங்கு நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தெரிவிக்கையில்;

நடிகர் சங்க அறக்கட்டளை சார்பில் நடிப்பு பயிற்சிக் கூடம் தொடங்கப்படுகிறது. மே 15 ஆம் திகதி விண்ணப்பம் வழங்கப்படுகிறது. ஜூலை 15 இல் வகுப்புகள் தொடங்கும். ஓராண்டு பயிற்சியில், நடிப்பு சம்பந்தமான கலைகள் கற்றுத்தரப்படும். ஆகஸ்ட் மாதம் நாடகப் போட்டி நடக்கிறது. இந்த முறை, முன்னணி நடிகர்கள் பங்கேற்கும் நாடகங்களும் நடக்கும். நானும் ஒரு நாடகத்தில் நடிக்கிறேன்.

நடிகர் சங்கமும் ஜேப்பியார் அறக்கட்டளையும் இணைந்து, 194 பேருக்கு ஓய்வூதியம் வழங்குகிறது. நடிகர் சங்கத்தில் இப்போது ரூ.3.12 கோடி இருப்பு உள்ளது. இதைப் பயன்படுத்தாமல், வேறுவகையில் நிதி திரட்டி, நடிகர் சங்க புதிய கட்டிடம் கட்டப்படும்.

வெளிநாட்டில் கலை நிகழ்ச்சி நடத்தி நிதி திரட்டுவதற்கு துணைபுரிந்த சன்.டி.வி. மற்றும் ராடன் நிறுவனங்களுக்கு நன்றி.

'வெளிநாட்டில் மட்டும் நிகழ்ச்சி நடத்துகிறீர்கள். இங்கு நடத்தமாட்டீர்களா?' என்று பலர் கேட்கிறார்கள். தமிழ் திரையுலகின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா சென்னையில் நடக்க உள்ளது. அதில் கலந்து கொள்ள, முதல்வர் கருணாநிதி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆகியோரை அழைக்க உள்ளோமெனத் தெரிவித்தார்.

## பன்றி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெல் விளைவு அதிகமாக காணப்பட்டதாக கமத் தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த வேளையில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும் உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிக ளில் செய்யப்பட்ட நெற் செய்கையாளர்கள் குரங் குகள் பன்றிகளின் தொல்லைகள் காரணமாக முழுமையான பயனை அடைய முடியாத நில மைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் யாழ் மாவட்டத் தில் உள்ள மக்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்களாகும் . இந்நிலைமையில் விவசாயிகளை இந்த மிருகங்களிடம் இருந்து பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் உரிய திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அதிபருக்கும் உரிய பொறுப்பாகும்.ஆனாலும் கூட உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவில்லையென்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை, குறிப்பிட பிரச்சனைகள் சம்பந்தமாக விவசாயத் திணைக்கள விரிவாக்க பிரதிப் பணிப்பாளர் க.சிவகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த விடயம் அரச உயர் மட்டத்திற்கு தெரிவிக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

இந்த மிருகங்களின் தொல்லைகள் குறித்து என்ன தான் அரச அதிகாரிகள் கூறினாலும் கூட விவ சாயிகளைப் பொறுத்த வரையில் நீக்கப்பட வில்லையென்பதே உண்மையாகும். விவசாய சம்மேளனங்கள் பிரதேச செயலகங்களில் நடைபெறும் மாதாந்த கூட்டங்களில் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஓங்கி குரல் கொடுத்த போதிலும் இதுவரை எதுவும் செய்யப்படவில்லை யென மன வேதனையுடன் கூறுகின்றார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விவசாயிகளின் பிரச்சனைகளை உணர்ந்து முட்கம்பி வேலிகள் அமைப்பதற்க்கு சில இடங்களில் உதவி செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய தாகும்.

கட்டாக்காலிகளாக திரியும் ஆடு மாடுகளை கட்டுப்படுத்த உற்பத்திக் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனைப் போன்ற நடவடிக்கைகளை இந்த பன்றிகள் குரங்குகள் விடயத்தில் விவசாயிகளினால் மேற் கொள்ளமுடியாது. இவற்றைக்கட்டுப்படுத்த நீண்டகால காத்திரமான நடவடிக்கையொன்று மேற் கொள்ளப்பட வேண்டிய தேவையும் அவசியமும் காணப்படுகின்றது. இதனைக்கட்டுப்படுத்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து முழுமையானதும் நிலையானதுமான ஒரு வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டியது அவசியமாகும்.

இன்று விவசாயிகள் குறிப்பாக விவசாய உள்ளீடுகளைப் பெறுவதில் இருந்து மூலப் பொருட்கள் பெறுவது வரைக்குப் பலத்த பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தே அதனைப் பெற்று செய்கை பண்ணிவருகின்றார்கள். இவ்வாறு இவர்கள் கஷ்டங்களைத் தாங்க, உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட் களை சந்தைப்படுத்த முடியாமல் [illegible] அதற்கு உரிய அரச அதிகாரிகள் கண்மூடி இருப்பதும் கவலைக்குரிய விடய மாகும்.

## வேறு கிரகத்துக் பெண் பூமிக்கு வருகையா?

# பறக்கும் உருவத்தால் மெக்ஸிக்கோவில் பரபரப்பு

மெக்ஸிக்கோசிட்டி : பறந்து செல்லும் பெண் உருவமொன்று மெக்ஸிக்கோவில் படம் பிடிக்கப்பட்டுள்ளதனால் வேறு கிரகத்துப் பெண் பூமியில் நடமாடுவதாக பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு 2006 ஆம் ஆண்டு மே மாதம் இதேபோன்றதொரு செய்தி மெக்ஸிக்கோவில் பரவியது. வானில் அடையாளம் தெரியாத மர்மப் பொருட்களை படம் பிடிக்கும் விண்ணியல் ஆய்வாளர்கள் பலர் மலைப் பகுதியில் தாவித் தாவி பறக்கும் இப் பெண் உருவத்தைக் கண்டுள்ளனர். இந் நிலையில் இரு ஆண்டுகளுக்கு பின்னர் இந்த பறக்கும் உருவம் நியூவோ லியோன் மலைப்பகுதியில் நடமாடியது உறுதி செய்யப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோவின் பிரபல விண்ணியல் ஆய்வாளர் அன்னா லூசியா சிட் என்பவர் தலைமையிலான குழுவினர் இதனை உறுதி செய்துள்ளனர். மேலும் இதற்கான வீடியோ பட ஆதாரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து அன்னா லூசியா தெரிவித்துள்ளதாவது;

மலைப்பகுதியில் பறக்கும் உருவம் நடமாடுவது உண்மை தான்.எங்களின் தொடர்ச்சியான ஆய்வு இதனை, உறுதிப்படுத்துகிறது. பறக்கும் அந்த உருவத்தை படம் பிடித்திருக்கிறோம். ஆனால் அதன் தோற்றம் தெளிவாகப் பதிவாகவில்லை. புகை போன்ற உருவம் மட்டுமே அதில் தெரிகிறது. அந்த உருவம் பெண் போன்ற தோற்றத்தில் காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இவர்களைத் தவிர இரு பொலிஸ் அதிகாரிகளும் இப்பெண் உருவத்தை நேரில் பார்த்துள்ளனர். இவர்கள் இருவருமே வெவ்வேறு நகரங்களில் பணிபுரிபவர்கள். இவ்விருவரும் தற்போது வெளியிட்டுள்ள தகவல்களால் தான் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளும் விண்ணியல் ஆய்வாளர்களும் ஒரே நேரத்தில் இப்படிச் சொல்வதால் 2006 இல் பார்த்த அந்த பறக்கும் மர்ம பெண் வேறு கிரகத்தை சேர்ந்தவராக இருப்பாரோ என்றும் இறந்து போன பெண்ணின் ஆவியாகக் கூட அது இருக்கலாம் என்றும் உலகம் முழுவதும் பரபரப்பு பரவியுள்ளது.

## உலக அரங்கு

தொகுப்பு: எஸ்.எஸ்.ஆர்

## 5 அமெரிக்கப் படை ஜூலைக்குள் வாபஸ்

வாஷிங்டன்: ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க படையினரின் 5 படைப்பிரிவுகள் எதிர்வரும் ஜூலைக்குள் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்படவுள்ளன.

இவ் விவகாரம் தொடர்பில் வாஷிங்டனிலுள்ள இராணுவ தலைமை மையமான பென்டகனின் இராணுவ அதிகாரிகளின் குழுத் தலைவர் ஆடம் மைக் முல்லன்,


ஈராக்கில், பஸ்ரா, பாக்தாத் நகர்களில் சமீபத்தில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து உள்ளன. வன்முறை நீடித்தாலும், எங்கள் முடிவில் மாற்றம் இல்லை. வருங்காலத்தில் அங்கு அமைதியை நிலைநாட்ட வேண்டியது, அங்கு தற்போது இருக்கும் ஆட்சியின் பொறுப்பு. ஈராக்கில் தொடர்ந்து வன்முறை நீடித்து உயிரிழப்புக்கள் அதிகரித்தால், அப்போதைய சூழ்நிலையை நாங்கள் பரிசீலித்து முடிவு எடுப்போம் எனத் தெரிவித்தார்.

## சிறுமியை தீயில் வீசிய வாலிபன்

மதுரா: உத்தரப் பிரதேசத்தில் சிறுமி ஒருத்தியை வாலிபர் ஒருவர் தீயில் தூக்கி வீசியதால் அச்சிறுமி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உ.பி. மாநிலம் மதுரா அருகே தராலி ஜனுபி என்ற பகுதியில் ஒரு பாதை வழியே 6 வயது சிறுமி தனது தாயுடன் நேற்று முன்தினம் சென்ற போது அப்பகுதியில் குடியிருக்கும் சன்னி என்ற இளைஞர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சிறுமியும் அவரது தாயும் அந்தப் பாதை வழியே செல்ல எதிர்ப்பு தெரிவித்தார்.

இதையடுத்து இளைஞருடன் அந்த சிறுமியின் தாய் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது சன்னியின் எதிர்ப்பையும் மீறி அந்தப் பாதையில் தொடர்ந்து சென்றாள் சிறுமி. ஆத்திரமடைந்த இளைஞர் அருகே எரிந்து கொண்டிருந்த நெருப்பில் சிறுமியை தூக்கி வீசினார்.



கசகஸ்தானில் இருந்து விண்ணுக்கு ஏவப்பட்ட கியோவ் - பி 2 செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் சீறிப்பாய்வதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழில் வளர்ச்சி அடையும் பெரும் துடுப்பாட்டப் போர்கள்



யாழ். குடாநாட்டின் கல்லூரிகளுக்கு இடையே இடம் பெறும் பெரும் துடுப்பாட்டப் போர்கள் வருடா வருடம் களைகட்டத் தொடங்கியுள் ளன.

## 'பெரும் போர்' போட்டிகளின் இவ்வருட முடிவுகள்

- யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ.சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 102 வது 'வடக்கின் பெரும் போர்' போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி 38 ஆண்டுகால இடை வெளியின் பின்னர் இனிங்ஸ் மற்றும் 133 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.
- யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட் டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற 92 வது 'பொன்னணிகளின் போர்' போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெறும் வாய்ப்பு இருந்த போதிலும் யாழ்ப்பாணக் கல்லூரியின் சாமர்த்தியமான விளையாட்டினால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.
- சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற எட்டாவது 'வீரர்களின் போர்' போட்டியில் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி வெற்றி பெற்றது.
- யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே முதல் தடவையாக இடம்பெற்ற 'இந்துக்களின் போர்' போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந் தது.



பெரும் துடுப்பாட்டப் போர்கள் ஆரம்பிக்கப் பட்டதன் உண்மையான நோக்கம் கல்லூரிகள் மட்டத்தில் துடுப்பாட்டத்தை அபிவிருத்தி செய்தல் விட்டுக் கொடுத்தல் வெற்றி தோல்வியை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுதல் கல்லூரிச் சமூகங்களுக்கு இடையே நட்பையும் உறவையும் வளர்த்துக் கொள்ளுதல் பழைய மாணவாகள் புதிய மாணவாகள் பெற்றோர்களுக்கு இடையே புரிந்துணர்வை ஏற்படுத்துதல் என்று பல காரணிகளின் அடிப்படையில் இந்த துடுப்பாட்டப் போட்டிகள் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன.

இந்த இலக்கும் கொள்கையும் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சரியான முறையில் சென்றுள்ளது என்றே கூற வேண்டும்.முதன் முதலில யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே 1901 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வடக்கின் பெரும் போர் என்ற இப் போட்டி இன்று நூற்றாண்டைக் கடந்து 102 வது போட்டியும் இந்தாண்டு நடைபெற்றுள்ளது.

தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான பொன்னனிகளின் பெரும போர் போட்டி 92 வது ஆண்டாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. அண்மைக் காலத்தில் இப் போட்டிகளின் வரிசையில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரிக்கும் இடையேயான வீரர்களின் பெரும் போர் எட்டாவது ஆண்டாக இடம்பெற்று முடிவடைந்துள்ளது.

இந் நிலமையில் இந்தாண்டு இந்துக்களின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் முதல் தடவையாக நடைபெற்று முடிந்துள்ளது.

இது உண்மையில் வரவேற்றக்கத்தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும்.கல்லூரிகள் தமது மாணவாகளின் திறமைகளையும் ஆற்றல் களையும் வெளிப்படுத்த உரிய ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இப் போட்டிகளின் பெயர்களில் மைதானத்தில் இடம்பெறும் சில சம்பவங்களும் மைதானத்திற்கு வெளியே போட்டிகள் ஆரம்பிக்கப் படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் இடம் பெறும் சம்பவங்களும் இன்று பலரிடம் பல் வேறு விமர்சன்ங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்

போட்டிகளின் பெயரில் பொது மக்களின் அனறாட நடவடிக்கைக்கு இடையூறாக குறிப்பிட்ட சிலர் வீதிகளில் செய்யும் அட்டகாசம் மக்களினால் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கின்றது.

முன்னர் முதியவர்களுக்கும் மற்றும் சமூகத்தினருக்கும் மதிப்பளிக்கும் நிலமை காணப் பட்டது.இன்று அந்த நிலையில் பாரிய இடை வெளிகளும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன.கட்டிளமைப் பருவத்தினரிடையே யாருக் கும் மதிப்பளிக்கும் பண்பும் மன நிலைமையும் இன்று காணப்படுவதில்லை. தறிகெட்ட ஆபத்தான ஒரு சமூக கட்டமைப்பு இன்று உருவாகி வருகின்றது உருவாக்கப்பட்டுள்ளது.

இந் நிலமையில் பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் கட்டிளமைப் பருவத்தினர் தறிகெட்டுச் செல்வதற்க்கும் கதாநாயகனாக வேடத்தைக் காட்டு வதற்க்கும் கூட இந்த போட்டிகள் இடம்பெறும் மைதானங்கள் மேடைகளாக அமைகின்றது என்பதையும் சமூகம் எற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட சிலருக்காக போட்டிகளை நிறுத்துவதா என்ற கேள்வி எழலாம்.ஆனால் இந்த குழப்பங்கள் சண்டைகள் உருவாக்குபவாகள் விடயத்தில் உரிய கவனத்தை கல்லூரிகள் சமூகம்/அமைப்பாளர்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் மாணவர்கள் என்று அனைவரும் இணைந்து கண்காணிப்பதுடன் விரும்பியோ விரும்பாமலோ சில கட்டுப்பாடுகளையும் நடவடிக்கைகளையும் யார் யார் என்று பார்க்காது மேற்கோள்ளவேண்டியது அவசியமாகும்.

இந்தாண்டு இடம்பெற்ற பெரும் போரின் போது கல்லூரிகளின் பழைய மாணவர்கள் ஆதரவ்ாளர்கள் என்று கூறுபவர்களுக்கு இடையே சண்டைகள் முரண்பாடுகள் இடம் பெற்றுளளன. துடுப்பாட்ட மட்டை உடைக் கப்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தினர் தலையிட்டுள்ளார்கள்.

இந்த நிலமைகளுக்கு பெரும் துடுப்பாட்டப் போர்கள் எதிர் காலத்தில் இடமளிக்கக் கூடாது.

இதற்கு முன்னேற்பாடாக நடவடிக்கைகள் உரிய கல்லூரிகளின் மாணவாகள் பழைய மாண வர்கள் இணைந்து மேற்க்கொள்ளவேண்டும் இதே போன்று இவாகள் விழிப்புடனும் பொறுப்புடனும் நடந்து கொண்டால் பெரும் துடுப் பாட்டப் போர்கள் பெரும் மகிழ்சிகரமான விளையாட்டாக முடிவடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

எதிர் காலத்தில் தற்போது விளையாடாது இருக்கும் பாடசாலைகளும் கூட ஒரு போட்டியை ஏற்படுத்தி இலங்கையில் எந்த மாவட்டத்திலும் இடம்பெறாத அளவுக்கு பல பெரும் துடுப்பாட்டப் போர்கள் நல்ல முறையில் இடம்பெறும் மாவட்டமாக யாழ் மாவட்டம் விளங்கும் என்பதில் நாம் அனைவரும் மகிழ்சி அடையலாம். பெருமை அடையலாம்.

பெரும் துடுப்பாட்டப் போட்டி ப்றறி யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் தலைவரும் கிரிக்கெட் ரசிகருமான செ.சணமுகலிங்கத்திடம் கருத் துக் கேட்ட போது:



யா்ழ மாவட் டத்தில் இன்று மக்களுக்கு பொழுது .போகக்குவதற்க்கு வசதிகள் இல்லை. இந் நிலையில் துடுப்பாட்டப் போட்டிகள் உதை பந்தாட்டப் போட்டிகள் உட்பட ஏனைய விளை யாட்டுக் களும் இடம் பெறுகின்றமை வரவேற்கக் கூடியதாகும். பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் என்பது கல்லூரிகளையும் மாணவாகள் பழைய மாணவர்கள் கிரிக்கெட் ரசிகர்கள் ஆதரவாளர்கள் பெற்றோர்கள் என்று பலரையும் உற்சாகப்படுத்தி இரண்டு மூன்று நாட்களாக மைதானத்தை நோக்கி நகரச்செய்து உற்சாகப்படுத்தும் ஒரு நிகழ்வாகும்.

இதனை அமைதியான முறையில் இருந்து ரசிக்கவேண்டும் இளைஞர்கள் உற்சாகத்துடன் இருப்பார்கள் செயல்படுவாகள் இதறக்காக மைதானத்தில் இறங்கி போட்டியை பாதிக் கவோ அன்றி பார்வையாளர்களை குழப்பவோ கூடாது எனவும் குறிப்பிட்டார்.

# விளையாட்டை வினையாக்கும் அரசியல்

சீனாவின் தலைநகர் பிஜீங்கில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 08 ம் திகதி ஒலிம்பிக்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதன் முன்னோடியாக ஒலிம்பிக் தீபம் உலக நாடுகளுகக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.

விளையாட்டு அறிமுகத்துக்காக அழைப்புக்காக கொண்டு செல லப்படும் ஒலிம்பிக் தீபம் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் அமைதியாக இருக்கும் நாடுகளும் கூட அதிர்வுகளுக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கும் துர்பாக்கிய நிலமைக்கும் தள்ளப்பட்டுள்ளன.



தீபேத்தின் ஆத்மீகவாதியான தலாய்லாமா தீபெத்துக்கும் தீபெத்திய மக்களுக்கும் சுதந் திரம் வேண்டி கோரிக்கைகளையும் வேண்டுதல் களையும் உலக நாடுகளுக்கு விடுத்து வருவதுடன் ஆத்மீக வழியில் போராாட்டங்களையும் நடத்தி வருகின்றார்.

சீனா இந் நடவடிக்கைகளுக்கு எதிாப்புக் காட்டுவதுடன் போராட் டத்தை அடக்கும் நசுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதுடன் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

இதனை தீபெத்திய மக்கள் வெறுக்கின்றார்கள் எதிர்க்கின்றார்கள். இதனை அடக்கும் முகமாக சீனாவின் நடவடிக்கைகள் பெரும் விமர்சனங்களுக்கும் மனித உரிமைப் பாதிப்புகளுக்கும் உலக நாடுகளின் மனித உரிமை அமைப்புக்களையும் மற்றும் மனித நேய ஆர்வலர்களையும் இதன் பால் திசை திரும்பச் செய்துள்ளது.

பிரிட்டனில் ஒலிம்பிக் தீபம் கொண்டு செல் லப்பட்ட வேளையில் அங்குள்ள தீபெத்திய மக்கள் ஒலிம்பிக் தீபத்தை அணைக்கவும் அதனைப் பறிக்கவும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்கள்.இதன் மூலம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளார்கள்.

தொடர்ந்து பலத்த பாதுகாப்பின் மத்தியில் ஒலிம்பிக் தீபம் பிரான்சுக்கு கொண்டு செல்லப் பட்ட வேளையிலும் கூட இந் நிலமை காணப் பட்டதுடன் தொடர்ந்து கொண்டு செல்லப்பட்ட நாடுகளிலும் கூட பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்ல வேண்டிய நிலமை அந்த நாடுகளுக்கு எற்பட்டுள்ளது. இந்தியாவிலும் கூட பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டாலும் அங்கும் ஒலிம்பிக் தீபத்தை எதிர்த்து போராட் டங்கள் இடம் பெற்றுள்ளதுடன் பலர் கைதும் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந் நிலமையில் ஆத்மீகவாதியான தலாய் லாமா விளையாட்டில் அரசியலுக்க இடமில்லை யென்பதையும் இதனை குழப்பச் கூடாது என்பதையும் இதய சுத்தியுடன் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றிற்க்கு தெரிவித்துள்ளார்

விளையாட்டை அரசியலாக்கும் நாடுகள் இதனையும் தமது அரசியல் லாபத்திற்க்கு பயன படுத்த தவறவில்லையென்பதே உண்மையாகும். இந்த வகையில் இந்தியாவுக்க ஒலிம்பிக் தீபம் கொண்டு செல்லப்பட்டு புதுடில்லியில் கொண்டு செல்லப்பட்ட வேளையில் இந்தியாவின் மத்திய அரசின் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.என்.கில் அரசியல்வாதிக ளுக்கும் சினிமாக்காரர்களுக்கும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும் என்ற தேவையும் அவசியமும் இல்லை ஆனாலும் விளையாட் டுத்துறை அமைச்சர் என்ற வகையில் நான் இந்த நிகழ்வில் கலந்து கொள்கின் றேன் என்று கூறியுள்ளார். இது கூட இந்தியாவின் உள்நாட்டு அரசியலின் விளையாட்டே இன்று விளை யாட்டை வளர்ப்பதற்க்காக வும் போட்டி பற்றி தகவலை உலகுக்கு அறிவிக்கவும் கொண்டு செல்லப்பட்ட ஒலிம்பிக் தீபம் அரசியல் சர்ச்சைக்குள் வீழ்ந்து படுதிண் டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளது. தீபெத்தியாகளுக்கு சீனாவின் முகத்திரையைக் கிழிக்க வும் சர்வதேச சமூகத்திற்கு காட்டவும் ஒலிம்பிக் தீபம் நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றாலும் கூட மிகையாகாது இதன் மூலம் தமது நோக்கை கணிசமான அளவுக்க தீபெத்தியர்கள் உலகிற்கு காட்டி வெற்றி பெற்றுள்ளாாகள் என்றே கூறலாம்.

## நவயுகன்

அரசியலில் ஒலிம்பிக்கும் ஒலிம்பிக்குள் அரசியலும் என்ற நிலைப்பாடு இன்று ஒலிம் பிக் அமைப்பாளர்களையும் கூட தலையை பிய்த் துக் கொள்ளும் நிலமைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் ஒலிம்பிக் தீபம் கொண்டு நாடுகளுக்கு இடையே செல்வது கூட பிரச்சனையாக கருதும் நிலமைக்கு இட்டுச்சென்றுள் ளது.

எதிர் காலத்தில் ஒலிம்பிக் தீபத்தை நாடுகளுக்கு இடையே கொண்டு செல்வதை தவிர்த் துக் கொள்ளவேண்டும் என்ற முடிவை எடுக் கும் நிலமைக்கு சென்றள்ளது கூட ஒரு வகையில் அரசியல் விளையாட்டாகவே கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மைய ஊடகவியல் டிப்ளோமா பகுதிநேர இரண்டாம் அணி மாணவர்களின் முதலாவது இதழாக ஏப்ரல் 2008 இல் வெளியிடப்பட்டது.